7308

Register Number | | | | | |

# தமிழ் - இரண்டாம் தாள்

# Language – Part A – TAMIL – Paper II

நேரம் : 2 $\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்பு : i) கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்.

ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினவாகவும் இருத்தல் வேண்டும்.

iii) கட்டுரைகள் முன்னுரை, பொருளுரை மற்றும் முடிவுரைகளைக் கொண்டு இருத்தல் வேண்டும்.

I. எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் விடை தருக : 5 × 1 = 5

1. அறிவியல் அறிஞர்கள் செயற்கைக் கோளை விண்ணில் ஏவினர்.
   ( செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக )

2. ஆகா ! திருக்குறள் கருத்துக்கள் எவ்வளவு சிறப்பாக உள்ளன.
   ( செய்தி வாக்கியமாக்குக )

3. அறம் செய்ய வேண்டும்
   ( கட்டளை வாக்கியமாக்குக )

4. பரந்தாமன் படம் வரைந்தான்.
   ( பிற வினையாக்குக )

5. புகை இருந்தால் நெருப்பு இருக்கும்
   ( எதிர்மறை வாக்கியமாக்குக )

6. மாணவர்கள் கடுமையாகப் பயிற்சி செய்தனர்;
   அனைவரும் தேர்ச்சி பெற்றனர்.
   ( கலவை வாக்கியமாக்குக )

7. தான் மறுநாள் சென்னைக்குச் செல்ல இருப்பதாக சரவணன் கூறினான்.
   ( நேர்க்கூற்று வாக்கியமாக்குக )

[ Turn over

II. கீழ்க்காணும் வினாக்கள் **அனைத்திற்கும்** விடையளிக்கவும். 5 × 1 =

8. ஏதேனும் *ஒன்றனுக்கு* மட்டும் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

அ) விருப்பு வெறுப்பு

ஆ) வேலியே பயிரை மேய்ந்தாற் போல

இ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

9. வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக :

காத்தாலே எழுந்து படிச்சா மனசிலே நிற்கும்.

10. மரபுப் பிழை நீக்கி எழுதுக :

பசுக் குட்டியும் ஆட்டுக் கன்றும் துள்ளி விளையாடின.

11. பிறமொழிச் சொற்களை நீக்கி ஏற்ற தமிழ்ச் சொற்களை எழுதுக :

பஸ்ஸில் ஏறியதும் டிக்கெட் வாங்க வேண்டும்.

12. ஏற்ற இடங்களில் நிறுத்தற் குறிகளை இடுக :

மானூரைப் பெற்ற கவிராயர் மிக மகிழ்ந்து மகாராசா அவர்கள் பல கலைகளைத் தம்மிடம் வைத்துக் கொண்டு மானை எனக்கு வழங்கினார்கள் என்று சாதுரியமாகக் கூறினார்.

III. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக : 3 × 2 = 6

13. பகுபத உறுப்பிலக்கணம் தருக. ( ஒன்றனுக்கு மட்டும் )

அ) தோன்றுக ஆ) மகிழ்ந்து

14. பிரித்து எழுதுக.

அ) வெவ்விருப்பாணி ஆ) அவன்றாள்.

15. இன்றியமையாத இலக்கணக் குறிப்புத் தருக. ( இரண்டினுக்கு மட்டும் )

அ) மதிமுகம்

ஆ) நானிலம்

இ) ஏற்றார்.

IV. கீழ்க்காணும் வினாக்களுக்குரிய விடையைத் தெரிந்து எழுதுக : 20 × 1 = 20

16. பைந்தமிழ் இலக்கணம் .................. வகைப்படும்.

அ) மூன்று

ஆ) பன்னிரெண்டு

இ) ஐந்து.

17. பொது மொழிக்கு எடுத்துக்காட்டு

அ) மனிதன் ஆ) வட்டம்

இ) தாமரை ஈ) நிலம்.

18. மொழிக்கு முதலில் மட்டும் வரும் குறுக்கம்

அ) ஆய்தக் குறுக்கம்

ஆ) ஐகாரக் குறுக்கம்

இ) ஔகாரக் குறுக்கம்.

19. பதிவெண் என்பது .............. எனப் பிரியும்.

அ) பதிவு + எண் ஆ) பதிவி+ எண்

இ) பதி+ வெண் ஈ) பதிவ்+ எண்.

20. ஆறு பெரும் பொழுதுகளையும் பெரும் திணைகள்

அ) குறிஞ்சி மருதம் ஆ) மருதம் நெய்தல்

இ) நெய்தல் முல்லை ஈ) முல்லை பாலை.

21. .வாழ்தல், வைதல், வேண்டல், விதித்தல் பொருளில் வரும் வினைமுற்று

அ) குறிப்பு வினைமுற்று

ஆ) ஏவல் வினைமுற்று

இ) வியங்கோள் வினைமுற்று.

22. கோப்பெருந்தேவி வந்தது. இது ...............

அ) பால் வழு

ஆ) திணை வழு

இ) கால வழு

ஈ) இட வழு.

23. பாடல் அடிகளை எவ்வாறு மாற்றி ஒலிப்பினும் பொருளும், ஓசையும் மாறாதிருப்பது

அ) இணைக்குறள் ஆசிரியப்பா

ஆ) நிலை மண்டில ஆசிரியப்பா

இ) அடிமறி மண்டில ஆசிரியப்பா

ஈ) நேரிசை ஆசிரியப்பா.

24. விரைவு, வெகுளி, மகிழ்ச்சி, அச்சம், அவலம் காரணமாக சொல் அடுக்கி வருவது

அ) ஒரு பொருட் பன்மொழி

ஆ) அடுக்குத்தொடர்

இ) இரட்டைக் கிளவி.

25. தனிநிலை, முப்புள்ளி என்ற பெயர்களால் வழங்கப்படுவது .............. .

26. கடைக்குச் சென்று வருவாயா ? என்ற வினாவிற்குச் செல்லேன் என்பது

அ) நேர் விடை

ஆ) ஏவல் விடை

இ) மறை விடை.

27. 'கெட்டார்க்கு' - இதற்குரிய அசை

அ) நேர் நேர் நேர்

ஆ) நேர் நிரை நேர்

இ) நிரை நிரை நேர்

ஈ) நிரை நேர் நேர்.

28. பருப்புளவோ வணிகரே என வினவுவது ................. வினா ஆகும்.

29. குறிஞ்சிக்குரிய பெரும்பொழுதுகள்

அ) ஆறு பெரும் பொழுதுகளும்

ஆ) குளிர்காலமும், முன்பனிக் காலமும்

இ) இளவேனில், முதுவேனில், பின்பனிக் காலம்.

30. 'உயிர்க்கு' என்னும் ஈற்றுச் சீர் பெறும் வாய்பாடு

அ) நாள் ஆ) மலர்

இ) காசு ஈ) பிறப்பு.

31. பொருத்துக:

அ) வியங்கோள் வினைமுற்று — பொன்னன்

ஆ) குறிப்பு வினைமுற்று — நடந்தான்

— வாழிய.

32. 'ஒருதனி' - இவ் எடுத்துக்காட்டால் சுட்டப் பெறுவது

அ) இரட்டைக் கிளவி

ஆ) அடுக்குத் தொடர்

இ) ஒரு பொருட் பன்மொழி.

33. ஒன்றைப் புகழ்வது போலப் பழித்தலும், பழிப்பது போலப் புகழ்வதும் ........................ அணியாகும்.

34. வயிறு வலிக்கும் என்பது

அ) உற்றது உரைத்தல்

ஆ) உறுவது கூறல் விடை

இ) இன மொழி விடை.

35. பொருத்துக :

அ) குறிஞ்சி — வறண்ட சுரமும், சுரம் சார்ந்த இடமும்

ஆ) மருதம் — மலையும், மலை சார்ந்த இடமும்

— வயலும், வயல் சார்ந்த நிலமும்.

V. அ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஆறனுக்கு** மட்டும் விடையளி : 6 × 2 = 12

36. ஐகாரக் குறுக்கமாவது யாது ? சான்றுடன் விளக்குக.

37. குறிப்பு வினைமுற்றை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

38. இறந்த கால வினை எச்ச வாய்பாடுகள் யாவை ?

39. வழு என்றால் என்ன ? எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

40. பால் வழுவமைதியைச் சுட்டுக.

41. குறிப்பு மொழி என்றால் என்ன ?

42. கொளல் வினா, கொடை வினா - இவற்றை விளக்குக.

43. வினாவிற்கு நேரடி விடைகளாக அமையும் விடை வகைகள் யாவை ?

ஆ) பின்வரும் வினாக்களுக்கு எவையேனும் **ஆறனுக்கு** மட்டும் விடையளி : 6 × 2 = 12

44. 'வயிற்று வலி' பிரித்துக் காட்டிப் புணர்ச்சி விதி தருக.

45. அன்பின் ஐந்திணைகள் யாவை ?

46. பொதுவியல் திணையை விளக்குக.

47. வெண்பாவின் பொது இலக்கணம் யாது ?

48. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற - இதில் பயின்றுள்ள அணியைச் சுட்டுக.

49. சொல் பொருள் பின்வரு நிலையணி

அல்லது

செம்மொழிச் சிலேடையணியை விளக்குக.

50. கீழ்க்காணும் குறட்பாவை அலகிட்டு வாய்பாடு கூறுக :

உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு.

VI. 51. கீழ்க்காணும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக : 5 × 2 = 10

நாடும் மொழியும் நமதிரு கண்கள்
நாம்தினம் போற்றி வணங்கிடு வோமே
கூடும் அன்பினில் வேற்றுமை மறந்தே
குலவிடு வோமே இந்தியர் என்றே
தேசிய சுதந்திரப் பயிரின் வேலி
தூயநல் ஒருமைப் பாடே யாகும்
ஓடிடும் வேற்றுமை நோயே உரிய
ஒருமைப் பாடெனினும் மாமருந் தாமே.

*வினாக்கள் :*

i) நம் இரு கண்களாகப் போற்றத் தக்கன யாவை ?

ii) கூடும் அன்பினில் குலவுதல் எவ்வாறு ?

iii) சுதந்திரப் பயிருக்கு வேலியாக அமைவது எது ?

iv) ஒருமைப் பாடென்னும் மாமருந்தின் பயன் யாது ?

v) பாடலுக்கேற்ற தலைப்பு ஒன்றைத் தருக.

VII. 52. நீ கண்டு களித்த சுற்றுலா இடங்கள் பற்றி உன் நண்பனுக்கு மடல் ஒன்று எழுதுக. 10

*அல்லது*

எழுத்தர் வேலை வேண்டி சர்க்கரை ஆலை மேலாண்மை இயக்குநருக்கு விண்ணப்பம் ஒன்று எழுதுக.

VIII. 53. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்று குறித்து ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை வரைக : 1 × 10 = 10

அ) விஞ்ஞானத்தின் விந்தைகள்

ஆ) சுற்றுச்சூழல் பாதுகாப்பு

இ) முயற்சி திருவினையாக்கும்.

[ Turn over

IX. 54. கீழ்க்காணும் தலைப்புகளுள் **ஒன்றனுக்கு** மட்டும் ஒன்றரைப் பக்கத்திற்கு மிகா
கட்டுரை வரைக :

1 × 10 =

அ) 'சத்தியமா' என்ற சிறுகதை உணர்த்தும் ரமணனின் பண்பு நலன்க
விவரித்து எழுதுக.

ஆ) குருவிப்பட்டிப் பாலமும், பொன்னம்பலமும்.

இ) 'பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு'

ஈ) 'மண்ணாசை' - பெயர்ப் பொருத்தத்தை ஆய்க.